

சித்திரை முழுமதி நாளை முன்னிட்டு நேற்று (12.05.2025) தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள தொல்காப்பியர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### தேனி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள

# மங்கலதேவி கண்ணகி திருக்கோயில் சித்திரை முழு நிலவு திருவிழா!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, மே 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (12.05.2025) தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லையில் வண்ணாத்திப்பாறையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி திருக்கோயில் சித்திரை முழு நிலவு திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் இத்திருக்கோயிலை புனரமைப்பது தொடர்பாகவும், மலைப் பாதையை சீரமைப்பது தொடர்பாகவும் கள ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மங்கலதேவி கண்ணகி திருக்கோயில் திருவிழா ஆண்டுதோறும், சித்திரை மாதம் முழு நிலவு அன்று தேனி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வண்ணாத்திப்பாறையில் கண்ணகி விண்ணுலகம் சென்றதாக கருதப்படும் மலை உச்சியில், சேரன் செங்குட்டுவ மன்னரால் அமைக்கப்பட்ட கோயிலில் தேனி மற்றும் இடுக்கி மாவட்ட மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்திருவிழாவினை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் தமிழக மற்றும் கேரள மாநில வருவாய்த்துறை, வனத்துறை, காவல்துறை மற்றும் பிற துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் கூட்டம் நடத்தப்பட்டு, பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசு தேனி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்துள்ளது.

மங்கலதேவி கண்ணகி திருக்கோயிலை முழுவதுமாக புனரமைத்து, பக்தர்கள் வருகின்ற பாதையையும் சீரமைத்து ஆண்டுக்கு ஒருமுறை தரிசனம் என்று இல்லாமல் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று இத்திருக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு தமிழ்நாடு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, இரு மாநில பக்தர்களின் நலன் கருதி, கண்ணகி திருக்கோயிலை சீரமைப்பது தொடர்பாக ஆய்வு செய்வதற்கும், இரு மாநில அறநிலையத்துறை அமைச்சர்கள் சந்தித்து பேசுவது தொடர்பாகவும், சபரிமலை சுவாமி ஐயப்பன் திருக்கோயிலுக்கு செல்கின்ற பக்தர்களின் பாதுகாப்பு கருதி அப்பகுதியில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் பக்தர்கள் தங்கும் விடுதி அமைப்பதற்கும், அவ்விடத்தை பராமரிப்பதற்கும் அனுமதி கோரி, கேரள மாநில முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபோது நானும், துறையின் செயலாளரும் நேரில் சந்தித்து கோரிக்கை வைத்து கடிதம் அளித்தோம்.

கண்ணகி திருக்கோயிலில் மாதந்தோறும் தரிசனம் செய்ய ஏதுவாக, திருக்கோயிலுக்கு செல்லும் பாதையினை சீரமைத்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் விரைவாக மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, இனி வரும் காலத்தில் பக்தர்கள் எளிமையாக தரிசனம் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், இன்றைய தினம் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 25,000 பக்தர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தரிசனம் முடிந்து செல்லும் பக்தர்களுக்கு குமுளியில் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பளியன் குடி வழியாக திருக்கோயிலுக்கு நடந்துசெல்லும் பக்தர்கள் அனைவருக்கும் தேவையான குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வெயிலின் தாக்கம் கருதி வழி நெடுகிலும் தற்காலிக பந்தல்கள் அமைத்துள்ளதோடு, பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் வாகன நெரிசலை ஒழுங்கு படுத்துவதற்காக காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இரு மாநில வனத்துறையினர் பக்தர்களுக்கு வன விலங்குகளால் எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாத வண்ணம் தடுப்பு வேலிகளை அமைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என். இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.சிவபிரசாத், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக வனபாதுகாவலர் மற்றும் துணை இயக்குநர் ஆனந்த், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் கார்த்திக், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது மற்றும் இரு மாநில அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு திருவிழாவில் நேற்று (12.05.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

# வீழனேரியில் மாட்டு வண்டி பந்தயம்!

## ஆர்.எம்.கென்னடி தலைமை! பவானி கணேசன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, மே.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வீழனேரி ஊராட்சி கிளைக் கழகம் மற்றும் இளைஞர் அணி சார்பில் தமிழக முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது. வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஏம்.கென்னடி தலைமையில் நடைபெற்ற மாட்டுவண்டி பந்தயத்தினை மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட சிறிய பெரிய மாட்டு வண்டிகள் பங்கேற்றது. பங்கேற்றவர்களுக்கு பரிசுகளை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.எம்.கென்னடி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தமிழ்ச்செல்வன், இளைஞரணி சக்தி தாசன் கே.எஸ். சுரேஷ், மாணவரணி சதீஷ், தகவல் தொழில்நுட்ப அணி சுசீந்திரன் மற்றும் வீழனேரி அதை சுற்றி உள்ள கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். மாட்டுவண்டி பந்தயத்தில் மதுரை, மேலூர், சிவகங்கை, புதுக்கோட்டை, அறந்தாங்கி உட்பட தென் மாவட்டங்களிலிருந்து கலந்து கொண்டார்கள்.

### மதுரை மணியம்மை பள்ளியில்

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் - திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிப்பு!

## அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றத் தலைவர் என்.எம்.மாரி தலைமையில்!

மதுரை, மே 13 -

பாவலர் பாரதிதாசன் அவர்களின் 135 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 29. 04. 2025 அன்று மாலை 5.00 மணி அளவில் மதுரை மணியம்மை பள்ளியில் மன்றத் தலைவர் என்.எம். மாரி தலைமையில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மன்றப் புரவலர் அரிமா மகா. கணேசன், துணைச் செயலாளர்கள் கரு. ஆறுமுகம், லெ. முருகேசன், துணைத் தலைவர்கள் டி.வி.அழகர், போடி காமராசு, ச.செல்வக்குமரன், செயற்குழு உறுப்பினர்கள் இல. வெள்ளைச்சாமி, நிழற்பட வல்லுநர் ரெ. கார்த்திகேயன், சிறப்பு அழைப்பாளர்கள் புரட்சிப் "பாவலர் மன்றத் தலைவர்" பெரியார் நெறியாளர் பி. வரதராசன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து,

சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் க.அ.உஸ்மான் அலி, குறும்பா பாவலர் இரா. இரவி, செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் அதிவீரபாண்டியன், மாமன்ற மேனாள் உறுப்பினர் கா.ரா.முருகேசன், ஆசிரியர் மோகனக் கண்ணன், வி. கண்ணன், திருமதி ஆ. தனலட்சுமி, முரசொலி பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளான ஏப்ரல் 29 ஆம் நாளை "உலகத் தமிழ் மொழி நாள்" என்று கொண்டாட வேண்டுமாய் முதல்வர் அவர்களை அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறது.




தாம்பரம் மாநகர தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் தாம்பரம் சண்முகம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலில் மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் சிட்லபாக்கம் இரா.விஜயகுமார் ஏற்பாட்டில் கோடை வெப்பத்தின் தாக்கத்தை தணிக்கும் விதமாக பொது மக்களுக்கு நீர் மோர் மற்றும் தர்பூசணி பழச்சாறு வழங்கபட்டது. இந்நிகழ்வில் சிட்லபாக்கம் இ.மனோகரன், டி.கே.தாமஸ், இரா.குளஞ்சிநாதன், எஸ்.சண்முகம், தே.முருகேசன், ரவிசந்திரன், இ.நவீன், எச்.சந்தோஷ், எஸ்.விஜய், ஆர்.லட்சுமி மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வக்ஃப் திருத்தச் சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர கேரள அரசு முடிவு!

திருவனந்தபுரம், மே 13–


வக்ஃப் சட்ட திருத்த மசோதா, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. அதற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்ததால், சட்ட வடிவம் பெற்று விட்டது. இதற்கிடையே, வக்ஃப் வாரிய சட்ட திருத்தத்தை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் வழக்கு தொடர்ந்துள்ளன. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பி.ஆர். கவாய் பதவியேற்றபின், அவர் தலைமையில் அமைக்கப்படும் அமர்வு, இந்த மனுக்களை விசாரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வக்ஃப் திருத்தச் சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர கேரள அரசு முடிவு செய்துள்ளதாக அம்மாநில சட்ட அமைச்சர் பி. ராஜீவ் தெரிவித்தார்.

அரசியலமைப்பு உத்தரவாதம் அளித்துள்ள மதச் சுதந்திரத்தை வக்ஃப் திருத்தச் சட்டம் மீறுவதாக உள்ளதாகவும் தெரிவித்த அவர், இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் மனுவை மாநில சட்டத்துறை தயாரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

29-ஆம் ஆண்டு

நினைவு அஞ்சலி



பொதுவுடமை தந்த புத்துயிர்ப்பு...
பொழுதளந்த திராவிடத்தில் உயிர்துடிப்பு!!!
போற்றும்படி வாழ்ந்த போர்முனைப்பு...
பூமி தந்த அவரே தனிப்பிறப்பு...
நூறாண்டு கடந்த நூல் மதிப்பு...

திரு A.K.சுப்பையா, EX MLA.,

தோற்றம் : 03.04.1920 ● மறைவு : 13.05.1996


நீங்கா நினைவுகளுடன்...

குடும்பத்தினர்கள் மற்றும் கழக தோழர்கள்

பாலன் டிஜிட்டல் திட்டச்சேரி - 9865787764

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அழகு திருநாவுக்கரசு
## மே 13 (2015)



மாணவர் பருவத்தில் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பயின்ற போது திராவிட மாணவர் கழக அமைப்பாளராக செயல்பட்டதுடன் தமிழகம் முழுவதும் கல்லூரிகளுக்கு சென்று திராவிட மாணவர் கழக அமைப்புகளை உருவாக்கியவர்.

கழக விவசாய தொழிலாளர் அணியின் செயலாளராக இருந்தார். தஞ்சை மற்றும் திருவாரூர் மாவட்ட பகுதிகளில் அவர் செய்த பொதுச் சேவைகள் மூலம் மக்களிடம் நிரந்தர செல்வாக்கு பெற்றவராக விளங்கினார்.

தலைவர் கலைஞர் மற்றும் தளபதி அன்பை பெற்றவராக திகழ்ந்தார். இறுதிநாள் வரை தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு மற்றும் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்று சுயமரியாதைக்காரராக வாழ்ந்து மறைந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.